விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
(தினம் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்
"சுதந்திரன்"
194A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நமமார்க்கும் குடியல்லோம்

கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை 9உ திங்கட்கிழமை | Colombo November, 24 1947 | ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 10 | இதழ் 74

வெளிநாடுகளில் குடியேறிய இந்தியர் அவதி

ஐக்கியநாடுகளின் ஸதாபனத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்

தங்கள் நலனுக்கு இந்தியரை வரவழைத்த நாடுகள் அவர்களுக்கு பூரண பிரஜா உரிமை வழங்குக!

இந்தியர் குடியேற்ற மகாநாட்டில் இந்திய சர்க்காரின் மாஜி மலேயா ஏஜெண்டு கோரிக்கை

சென்னை, நவ 22

எந்த நாட்டைச் சேர்ந்தவர்களும் தாங்கள் விரும்பும் எந்த நாட்டிற்கும் செல்ல அனுமதிக்கக்கூடியவாறு உலகநாடுகள் குடியேற்றக் கொள்கை திருத்தப்பட்டாலன்றி உணவு, துணி கட்டுப்பாடு பெருளாதார மந்தம் போன்ற பிரச்னைகளைத் தீர்க்க முடியாது குடியேற்றக் கொள்கை திருப்திகரமாக தீர்க்கப்படவேண்டுமானால் குடியேற்ற விஸதரிப்பு பிரச்னையை ஐ. நா. ஸதாபனம் தீவிரமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இன்று மாலை சென்னை மெமோரியல் ஹாலில் கூடிய இந்திய குடியேற்ற நாட்டு மக்கள் 2-வது மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ஸ்ரீ ஆர். கப்பையா நாயுடு கூறினார். இவர் மலேயாவில் இந்திய சர்க்காரின் ஏஜெண்டாக இருந்திருக்கிறார்.

வெளிநாடுகளிலெல்லாம் ஏராளமான இந்தியர் வசிக்கிறார்களென்றும் இந்த நாடுகளெல்லாம் தங்கள் காலனி அந்தஸ்தை உதறித் தள்ளிவிட்டன என்றும் இந்நாடுகளின் புதிய அரசியலில் இந்தியரின் வருங்கால அந்தஸ்து பற்றிக் தீவிரமாக ஆலோசிக்கப்படவேண்டுமென்றும் ஸ்ரீ சுப்பையா நாயுடு கூறினார். பல நாடுகளில் ஏராளமான நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் தரிசாகக் கிடக்கின்றனவே தவிர வெள்ளையரல்லாதார் இங்கு குடியேற அனுமதிக்கப்படுவதில்லை என்றார்.

அயல் நாடுகளில் இந்தியர் படும் கஷ்டங்களை விவரித்து ஸ்ரீ நாயுடு கூறியதாவது:-

வெளிநாடுகளில் இந்தியர் குடியேற்ற சட்டம் அடியோடு திருத்தப்படவேண்டும். இந்தியாவிலிருந்து தொழிலாளர் வெளியேறுவதும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த முறை மிகவும் பாதகமாகவே இருந்திருக்கிறது. தங்கள் சௌகரியத்திற்காக இந்தியர்களை வரவழைக்கும் நாடுகள் அவர்களுக்குக் காலனிகள் கட்டிக் கொடுத்து பூரண பிரஜா உரிமை அளிக்கவேண்டும்.

"மலேயாவும் இலங்கையும் இந்தியர்களை தொழிலாளர்கள் என்ற வகையிலேயே விரும்புகிறார்கள் இப்பிரச்னையை உலகப் பிரச்னையாக்கும்படி ஐ. நா. சவுன்சிலை நாம் அணுகவேண்டும்" என்றார் ஸ்ரீ நாயுடு.

வரவேற்புக் கமிட்டித் தலைவர் டாக்டர் வி. கே. ஜான் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில் அயல் நாடுகளில் பிரஜா உரிமையுமில்லாமல் பலவித கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு லட்சக்கணக்கான இந்தியர்கள் இருக்கிறார்களென்றும் இந்தியா சுதந்திரமடைந்துவிட்ட இந்த சமயத்தில் இம் மகாநாடு மிகவும் முக்கியமானதென்றும் கூறினார்.

காலனி மக்கள் சங்கம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரி கோரினார்.

"எகிப்தில் இந்தியர்" என்ற விஷயம்பற்றி லெப் கர்னல் டி. எஸ். சாஸ்திரியார், 'மலேயாவில் இந்தியத் தொழிலாளர்" என்பது பற்றி டாக்டர் சி. சிவராம சாஸ்திரியும் "மொரிஷஸில் இந்தியர்" என்பது பற்றி ஸ்ரீ எஸ். பைதவாவும், அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களிடையே "சமூக வேலையின் அவசியம்" என்பதுபற்றி ஸ்ரீ டி. எஸ். ராமானுஜமும் அறிக்கைகள் வாசித்தனர்.

நாளையத் தினம் மகாநாடு மீண்டும் கூடும்.

ஆஸ்பக்ரியில் காணாமல் போன குழந்தை

போலிஸார் விசாரணை செய்கின்றனர்

காலி, நவ 24

காலி சிவில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்டிருந்த 5 வயது குழந்தை ஒன்று காணப்படவில்லை. இது சம்பந்தமாக காலி இரகசியப் போலிஸ் இலாகா அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். ஐந்து வயதுச் சிறுவனை ஆஸ்பக்ரியில் லீலாவதியென்னும் பெண் சிகிச்சைக்காக வெள்ளிக்கிழமை காலை கொண்டுவந்து விட்டதாகவும் வெள்ளிக்கிழமை பிற்பகல் அங்கு போனபோது குழந்தையைக் காணவில்லையென்றும் கூறப்படுகிறது.

லார்டு மவுண்ட்பேட்டன் இந்தியா திரும்புகிறார்

லண்டன், நவ. 22

லார்டு மவுண்ட்பேட்டனும் லேடி மவுண்ட்பேட்டனும் அவர்கள் புத்திரி பாமலாவும் தங்கள் சிப்பந்திகளுடன் இன்று தனி விமானத்தில் லண்டனிலிருந்து டில்லிக்குப் பயணமானார்கள். இந்தியா ஹைக்கமிஷனர் திரு வி. கே. கிருஷ்ணமேனன் அவர்களை வழியனுப்பி வைத்தார்.

ஜப்பானில் பத்திரிகை பிரசுர கர்த்தா கைது

டோக்கியோ, நவ, 22

ஜப்பானில் ரகசிய சர்க்கார் இயக்க சம்பந்தமாக ஒரு மாத மிருமுறைப் பத்திரிகையின் பிரசுர கர்த்தா கைது செய்யப்பட்டார். இப் பத்திரிகை ஜப்பான் அரசியல் தலைவர்களைத் தாக்கி எழுதிவந்தது. ரகசிய சர்க்கார் இயக்கத்தை ஒடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது

(ராய்ட்டர்)

தரிழ்நாட்டில் இருப்பு நிலக்கரி கிடைக்கும்

சேலம் ஜில்லாவில் இருப்பு சதது அதிகம்

சென்னை, நவ 2

இந்தியசர்க்காரின் பூகத்துவ ஆராய்ச்சி இலாகா உதவி டைரக்டரான டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில், சேலம் ஜில்லாவில் இரும்பு சத்து உள்ள லோகச் சுரங்கங்கள் ஏராளமாக இருப்பதாகவும், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டால் சென்னை மாகாணத்தில் இரும்புத் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியுமென்றும் கூறினார்.

டாக்டர் கிருஷ்ணன் மேலும் கூறினார்:- "சேலம் ஜில்லாவில் 60 கோடி டன் இரும்பு சத்து பூமிக்கு அடியில் இருப்பதாக உத்தேசமாக மதிப்பிடுகிறேன். அதற்கு அதிகமாக இருக்கவும் கூடும். அந்த இருபது சத்து மட்டமான தரத்தைச் சேர்ந்ததல்ல இயமாதிரியான இருப்பு சத்ததான் அமெரிக்காவிலும் ஸ்வீடனிலும் எடுக்கப்பட்டு வருகிறது. மேட்டூரில் உற்பத்தி செய்யப்படும். மின்சார சக்தியின் உதவியைக் கொண்டு மாத்திரம் சேலம் ஜில்லாவில் அகப்படும் இரும்பு சத்தை உருக்கி எடுக்க முடியாது. மேட்டூர் மின்சார சக்தியுடன் பாபனாசம் மின்சார சக்தியையோ அன்றி கோவை, அல்லது மலபார் மின்சார திட்டத்தையோ இணைத்தால் இரும்புச் சத்தை உருக்க முடியும். இரும்பு சத்தை உருக்குவதில் சில சிரமங்கள் உண்டு. ஸவீடனிலும் அந்தச் சிரமங்கள் ஏற்பட்டன. அந்தச் சிரமங்கள் சமாளிக்கப்பட்டுவிட்டன. ஆகவே நம்முடைய சிரமங்களையும் நாம் சமாளிக்கலாம். சர்க்கார் லாபம் எதிர்பார்க்காமல் முதலீட்டுச் செலவுக்கு மாத்திரம் கட்டணம் வாங்கிக் கொண்டால், மின்சார சக்திக்கு அதிகச் செலவாகாது. சேலம் ஜில்லாவில் ஏராளமான இரும்பு சத்து சுரங்கங்கள் இருக்கின்றனவென்பது இப்பொழுது தெரிந்துவிட்டது. ஆகவே அதை எடுப்பதற்கு இனி சர்க்காரும் தனிப் பட்ட உற்பத்தியாளரும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்."

இந்தியாவில் வேறு ஏதேனும் புதிய உலோகங்கள் அகப்படுமா என்று கேட்டதற்கு டாக்டர் கிருஷ்ணன் கூறினார்:- "எண்ணெய் சம்பந்தப்பட்டவரை அஸ்ஸாமைத் தவிர இந்தியாவில் வேறு இடங்களில் கிடையாது புதிய உலோகங்கள் ஏதேனும் இந்தியா யூனியனில் கிடைக்கும் என்று நாம் நம்பவில்லை. ஆனால் ஏற்கனவே உள்ள உலோகங்கள் உத்தேசமாகப் பைப் பார்க்கிலும் அதிகமாகக் கிடைக்கக் கூடும்."

விருத்தாசலம் அருகில் நிலக்கரி அகப்படும்

சென்னை, நவ 21

தென்னாற்காடு ஜில்லாவில் விருத்தாசலத்திற்குச் சமீபமாக ஒருவகை மிருதுவான நிலக்கரி அகப்படுகிறதாம். அந்த நிலக்கரியை உபயோகிக்க முடியுமென்று சோதிக்கும் பொருட்டு ரயிலுவே போர்டைச் சேர்ந்த ஒரு இஞ்சினீயர் சுரங்கப் தோண்டி வருகிறார். மேற்கூறிய நிலக்கரியை உபயோகிப்பது சோதனைகளின் முடிவைப் பொறுத்தது. இந்தச் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி எடுக்கும் முறைகளைப்பற்றி ஆஸ்திரேலிய நிபுணர்களின் யோசனைகளைக் கேட்குமாறு இந்திய சர்க்காருக்கு அபிப்பிராயம் கூறப்படடிருப்பதாக டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்திய தேயிலைக் கைத்தொழில்

டிசம்பர் 10-ம் தேதி மகாநாடு

புதுடில்லி, நவ 22

சர்வதேச தேயிலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்படி இம்மாதத்தில் ஏற்படுத்திய 1938-வது வருடத்திய இந்திய தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டமும் இந்திய தேயிலை வரிச் சட்டமும் 1948 மார்ச் மாதம் 31-ம் தேதி காலாவதியாகின்றன. இதற்குப் பின் சர்வதேசக் கட்டுப்பாட்டுக்கு இந்திய தேயிலைக் கைத்தொழிலை உட்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பது குறித்தும் தேயிலை சம்பந்தமான மற்ற விஷயங்கள் குறித்தும் ஆலோசித்து முடிவு செய்வதற்காக 1947 டிசம்பர் 10, 11, 12-ம் தேதிகளில் கல்கத்தாவில் ஒரு மகாநாடு நடைபெறும். இம் மகாநாட்டில் இந்திய தேயிலைக் கைத்தொழில் பிரதிநிதிகளும் சர்க்கார் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள். [அ-பிரஸ்]

வெளிநாடுகளில் தாதிப் பெண்களுக்கு பயிற்சி

பரிசளிப்பு கூட்டத்தில் சுகாதாரடைரக்டர் பேச்சு

கொழும்பு, நவ. 24

கொழும்பு ரீஜண்ட் வீதியிலுள்ள தாதிப் பெண்கள் பயிற்சிக் கல்லூரியில் நேற்று மாலை மூர் சீமாட்டி பரிசுகளை வழங்கினார். இவரை டாக்டர் எஸ். எல். செல்லப்பா வரவேற்றார். இப்பொழுது இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து பயிற்சி பெற்ற தாதிப்பெண்களை வரவழைத்து இங்குள்ள தாதிப் பெண்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவது முடியாத விஷயமாக இருப்பதால் இங்கிருந்து பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சி பெற்று வந்து இங்குள்ளவர்களுக்கு கற்பிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென ஆலோசிக்கப்படுகிறதாக டாக்டர் செல்லப்பா பேசுகையில் கூறினார். பரிசுகளை மூர் சீமாட்டி வழங்கியபின் தேநீர் விருந்து நடைபெற்றது. பின்னர் மூர் சீமாட்டி தலைமையில் தாதிப்பெண்கள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றது.

மாஜி மேயரைத் தாக்கியதற்கு தண்டனை

அப்பீல்செய்யவிண்ணப்பம் எதிரி ஜாமீனில் விடுதலை

காலி, நவ 24

காலி மாஜி மேயர் திரு ஈ. எஸ். நாககாவத்தையைத் தாக்கியதாக எதிரி சிங்க ஆராச்சிகே மகாதுன் என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்டவழக்கில் எதிரிக்குமாஜிஸ்டிரேட் சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்தார். எதிரி அப்பீல் செய்ய விண்ணப்பித்ததினால் மாஜிஸ்டிரேட் எதிரியை ரூ. 1500 பணையில் விடுதலை செய்தார்.

கலால் இலாகா இன்ஸபெக்டர் கொலை வழக்கு

எதிரிக்கு 10 வருட சிறை

கொழும்பு, நவ. 22

ஹோமாகம பகுதியில் கடந்த வருடம் ஜூன் மாதம் 8-ம் தேதி கலால் இலாகா இன்ஸ்பெக்டர் ஈ. ஏ. டப்ளியூ. குணரத்ன என்பவரைக் கொலை செய்ததாக டப்ளியூ. ஜி. டேவிட்சிங்கோ என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அசைஸ் கோர்ட்டில் நீதிபதி கிருநாகலிங்கம் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணை முடிவில் கைமோசக் கொலை புரிந்ததாக எதிரி குற்றவாளியென்று ஜூரர்கள் ஏகமனதாகத் தீர்மானித்தனர். நீதிபதி எதிரிக்கு 10 வருட சிறைத் தண்டனை விதித்தார்.

புதிய யுத்தத்திற்கு மேற்கு ஜெர்மனியை தளமாக உபயோகிக்க முயற்சி

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ். மீது ரஷியாவின் குற்றச்சாட்டு

25 பக்கங்கள் கொண்ட அறிக்கை வாசிக்கப்பட்டது

நான்கு அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டின் கதி என்னவாகும்?

பெர்லின், நவ 22

அடுத்த செவ்வாய்க்கிழமையன்று ஜெர்மன் சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக லண்டனில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷியா ஆகிய நான்கு வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாடு நடைபெறவிருக்கிறது. அதற்கு முன் நேற்றிரவு இக்கு நடைபெற்ற ஜெர்மனியிலுள்ள நேசதேச ஆக்கிரமிப்பு சபையின் கடைசிக் கூட்டத்தில் ஜெர்மனியிலுள்ள சோவியத் பிரதேச ராணுவத் தளபதி மார்ஷல் சோக்லவஸ்கி, ஜெர்மனியை ஆக்கிரமிப்புச் செய்துள்ள ஏனைய வல்லரசுகளான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மீது குற்றஞ்சாட்டி அவைகளைப் பலமாகத் தாக்கிப் பேசினார்.

சென்ற ஒரு வருட காலமாக ரஷியா இந்த மூன்று வல்லரசுகள் மீது சாட்டிவந்த குற்றங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அவைகளை 25 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையாகத் தயாரித்து அந்த அறிக்கையை நேசதேச ஆக்கிரமிப்பு சபையில் படித்தார். கூட்டத்தின் நேரம் முழுவதும் இவரது பேச்சிலேயே செலவாயிற்று. அவர் சாட்டிய குற்றங்களின் சாராம்சம் பின்வருமாறு:- அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுசேர்ந்துகொண்டு மேற்கு ஜெர்மனியை புதிய யுத்தத்திற்கு ஒரு தளமாக உபயோகப்படுத்த முயன்று வருகின்றன. அவைகள் போட்ஸ்டாம் ஒப்பந்தத்தை மீறி ஜெர்மனியை ராணுவ சூன்யப் பிரதேசமாக்கவும் நாஜி சூன்யப் பிரதேசமாக்கவும் காலதாமதம் செய்து வருகின்றன. ஜெர்மனியிலுள்ள அமெரிக்கப் பிரதேசத்தையும் பிரிட்டிஷ் பிரதேசத்தையும் பொருளாதார விஷயத்தில் இணைத்துக் கொண்டிருக்கின்றன.

மகாநாடு முறியுமா?

லண்டன், நவ 22

பெர்லினில் நடைபெற்ற நேசதேச ஆக்கிரமிப்பு சபையில் ரஷிய தளபதி மற்ற மூன்று வல்லரசுகளையும் தாக்கிப் பேசியிருப்பதைப்பார்த்தால், அடுத்த செவ்வாய்க்கிழமை லண்டனில் கூடும் நான்கு வல்லரசுகளின் அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு வெற்றியுறும் என்று சொல்ல முடியாது. சரியான சந்தர்ப்பம் பார்த்து ரஷியா தாக்கியிருக்கிறது. மகாநாட்டில் சமரச மனப்பான்மை இராது.

இம் மகாநாட்டுக்கு நடவடிக்கை குறிப்பு தயாரிக்கும் உதவி அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாட்டிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

இத்தாலிய குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக நான்கு உதவி அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு திருப்திகரமான அபிவிருத்தியடைந்துளளது.

(ராய்ட்டர்)

டெஹ்ரான், நவ. 22

பாரசீகத்தில் இந்திய ஸதானிகராக நியமிக்கப்பட்டுள்ள அலி ஜாஹிர் தனது சிப்பந்திகளுடன் நேற்றிரவு இங்கு வந்து சேர்ந்தார். (ராய்ட்டர்)

போதனையில் பெண்கள் திறமை

மகாநாட்டில் பாராட்டு

கொழும்பு நவ. 24

கொழும்பு ஓய். டபிள்யூ. எம். ஏ. மண்டபத்தில் நேற்று நடைபெற்ற மகாநாட்டில் திரு. ஏ. எம். கே. குமாரசாமி பேசுகையில் பெண்கள் ஆண்களிலும் பார்க்க பேச்சிலும் கற்பிக்கும் முறையிலும் கெட்டிக்காரராக இருப்பதாக கூறினார்.

தப்பியோடிய குற்றவாளிகள்

காரணைத் திருடுகின்றனராம்

கொழும்பு, நவ 24

இப்பொழுது கார்கள் திருட்டுப் போவதற்கு வெளியிலுள்ள மூன்று குற்றவாளிகள் தான் காரணமென்று கூறப்படுகிறது. தலை மறைவாகத் திரியும் இம் மூன்று குற்றவாளிகளையும் போலிஸார் தேடிவருகின்றனர். வெளிக்கடைச் சிறையில் 15 வருடம் 5 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிய கைதி டொன்ஜேமிஸ் விஜயரத்தினா ஜெபசுந்தரா என்பவர் கிரிடி வெலாயைச்சேர்ந்த ஒரு கார் டிரைவராகும் இவர் செப்டம்பர் 2-ம் தேதி சிறையினின்றும் தப்பிவிட்டார்.

ஆகஸ்ட் 29-ம் தேதி பாதுகாப்பில் இருந்து விஜயகுரியா ஆராச்சி கே. டொன் சார்ல்ஸ் என்பவரும், ஏ. டி. சுகதாஸா என்பவரும் இன்னும்கண்டுபிடிக்கப்படவில்லை இவர்கள் மூவரும்சேர்ந்தேகார்களைக்களவாடுவதாகவும் கொடிய ஆயுதங்களை இவர்கள் வைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இவர்களைப்பற்றிய தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு பரிசளிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டிட வேலைகளுக்கு
வேண்டிய இரும்புச் சாமான்கள்,
சீமந்து
சிகப்புச் சீமந்து
வெள்ளைச் சீமந்து
ஆணி வகைகள்
பூட்டுகள்
கல்வனைஸ்ட் தகடுகள்
தீந்தை வகைகள்
வார்னிஷ்
வார்னிஷ் பிரஷ்
டிஸறம்பா
சோலடரிங் புளுயிட்
அரிக்கன் லாந்தர்
பொலிஷ் வகைகள்
இன்னும் தேவையான சகல சாமான்களும் கீழ்க்கண்ட விலாசத்தில் சகாயமாக பெற்றுக்கொளளலாம்.
ஓரியன் மெர்க்கன்டைல் ஏஜன்ஸி
346, 348, பழைய சோனகத் தெரு,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆண்டு முழுமை தினசரி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலைக்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1	மாதம்	ரூ. 2-00
3	மாதம்	ரூ. 6-00
6	மாதம்	ரூ. 12-00
12	மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A. தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411

சுவரொத்தி ஒரு கார்த்திகை மீ 9உ
திங்கட்கிழமை

பொய்யுரை !

தனியாட்சி நாடுகளும், கூட்டரசாங்கமும் தான் இலங்கைக்கு உகந்தது. இதைத் தமிழரும், கண்டி சிங்களவரும் வேண்டுமென்று கேட்கவில்லை. இன்று ஒரு சில வகுப்புவாதச் சிங்கள அரசியல் வாதிகள் சிறுபான்மையரை அடிமைப்படுத்த முனைந்து நிற்பதாலேயே இவ்விதம் கோருகின்றனர். மற்றவர்களை அடிமைப்படுத்த விரும்பும் எவரும் சுதந்திரத்துடன் வாழ முடியாது.

இந்நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும் ஒரு ஜாதியினரல்லர் அவர்கள் பேசுவது ஒரு பாஷையுமல்ல. அவர்களது கலை, கலாசாரம், கொள்கை, சமயம், பண்பு யாவும் வேறுபட்டவையாகும் இத்தகைய பலஜாதியினர் வாழும் ஐரோப்பிய நாடுகளில் தத்தம் தனிப்பட்ட கலை, கலாச்சாரம், கொள்கை, சமயம் முதலியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும் தங்கள் சுதந்திரத்தை விட்டுக்கொடுக்காதிருக்கவும் தனியாட்சி நாடுகளும் கூட்டரசாங்கமும் ஏற்படுத்தியிருக்கின்றனர் இதை நாம் பல தடவைகளிலும் கூறியிருக்கிறோம்.

இங்குள்ள தமிழர் சுதந்திரத்துடன் வாழ விரும்பாத ஒரு ஆங்கில தனசரி ஆசிரியருக்கு இக்கோரிக்கை பிடிக்கவில்லை மாரிகாலத்தில் நரிகள் நண்டு பிடிக்க வெளிப்படுவதுபோல், கோவாவிலிருந்து பணம் பிடிக்க வந்துள்ள இந்த நரி தமிழரை அடிமைகளாக்க முற்பட்டிருக்கிறது.

அவர் கூறும் நியாயம் தமிழரு அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நஷ்டமுறுவார்கள் என்பதாகும். அரசியல் ரீதியாக நஷ்டமடைவார்கள் என்று அவர் கூறுவதை எடுத்துக்கொள்ளுவோம். சென்ற சில காலமாக தமிழர் சிங்கள அரசியல்வாதிகளால் நடத்தப்படும் விதத்தை இவர் அறிந்திருந்தால் இவர் இவ்விதம் கூறமாட்டார் டொனமூர் திட்டத்தின்படி மந்திரி சபையினர் அத்தனைபேரும் சிங்களவர்களாக நியமிக்கப்பட்டார்கள் அசையிடுததமுக்கடித்த திரு சேனநாயக்கா என்னசொன்னார் தெரியுமா? "வேண்டுமென்றே நாம் மந்திரி சபையைச் சிங்களமயமாகினோம்" என்பதேயாகும்! இதன் பின்பு இலங்கை அரசியல சீர்திருத்தம் சம்பந்தமாக மந்திரிகள் ஓர் யதாஸ்தை தயாரித்தனர். உண்மையில் இலங்கையில தமிழர் வாழ்வதாக அவர்கள் எண்ணியிருந்தால் அந்த யதாஸ்தைக் காட்டியிருப்பார்கள். ஆனால் நடந்ததென்ன? இரகசியத்தில் தயாரித்தது, இரகசியமாகச் சீமைசாமிக்கு அனுப்பி வைத்தார்கள் மீண்டும் இப்பொழுது என்ன செய்தார்கள பிரிட்டிஷாருடன் "இலங்கைப் போலிச் சுதந்திரம்" சமபந்தமாக ஒப்பந்தங்கள செய்தார்கள். பிரதிநிதிகள் எனப்படடவர்கள் எவருக்காவது காட்டினார்களா? தாங்களே இலங்கையின் சொந்தக்காரர்கள் போன்று நடந்து கொண்டார்கள. இந்த நிலைமையில் தமிழர் தானு பிரிந்து வாழ ஆசைபபட்டவர்கள்? இலவே இல்லை. அவர்கள் மறைமுகமாகப் பிரிக்கப்பட்டே வைக்கப்பட்டிருக்கிறார்கள் சிங்கள வகுப்பு வாதிகளே தமிழரை முற்றாவும் பிரிததுவிடும்படிடிருக்கிறார்கள் இந்த நிலைமையிலும் தமிழ்த் தலைவர்கள் தமிழர் பிரிந்திருக்க வேண்டும் என்று அந்த ஆங்கில ஆசிரியர் கூறுவதுபோல் கூறவில்லை தமிழ் மக்கள் விரும்பினால்- அதுவும் வாக்கெடுப்பு வைத்துத்தான் இதைச் செய்ய வேண்டும் என்று தமிழத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். ஒப்பொழுதே அரசியல் முறையில் தமிழர் பிரிந்துதான் இருக்கிறார்கள. ஆனால் ஒன்று கூற விரும்புகிறோம். கூட்டரசாங்கமும், தனியாட்சி நாடுகளும் என்பது பாகிஸதான் அல்ல என்பதை இவ்வாசிரியர் உணர வேண்டும். அவ்வாசிரியர் கூறும் பொருளாதாரத துறையில் ஏற்படும் நஷ்டம் என்பது எவ்வளவு பொய்யுரை என்பதை நாளை குறிப்பிடுவோம்.

புதிய அரசியல் திட்ட அங்கீகாரப்பணம்

பி. பி. ஸி. ரேடியோவில் விசேஷ ஏற்பாடுகள்

கொழும்பு, நவ. 25

புதிய அரசியல் திட்ட அங்கீகாரப்பணக்கை மூன்றாவது மாலை 7-15 மணிக்கு பி. பி. ஸி. ரேடியோவில் நடக்கும் விசேஷ செய்திகளை இலங்கை ரேடியோவும் ஒலிபரப்புவதன் மூலமாக கலாபோற்ற நாட்டு மந்திரியின் செய்தியை தோல்பரி பிரபு திரு. வி. வி. எஸ் கொரியா டாக்டர் மகிவ்ஸ் ஆகியோரின் சம்பாஷணையும் ரேடியோவில் ஒலிபரப்பப்படும். வெற்றியின் மேலாக கவர்னர் ஒரு செய்தியை வெளியிடுவார் இதன் பிரதிகள் சிங்களம் தமிழ் ஆகிய பாஷைகளில் ஒலிபரப்பப்படும்.

டில்லிக்கு ஹைதராபாத் முஸ்லிம் தலைவர் பயணம்

ஹைதராபாத், நவ. 22

இங்கிய சர்க்கார் சமஸ்தானங்கள் மந்திரி சர்தார் படேலைச் சந்திக்கப் பேச ஹைதராபாத் சமஸ்தான முஸ்லிம் கட்சித் தலைவர் சையது காஸிம் ரஸ்வி இன்று டில்லிக்குச் செல்லுகிறார். அவர் தனது கட்சியின் நோக்கத்தை எடுத்துரைப்பார் இப்பொழுது டில்லியில் சமரசப் பேச்சு நடக்கிறதாம் ஹைதராபாத் தூதுக்கோஷ்டி நவம்பர் 27 ம் தேதி ஹைதராபாத்துக்குத் திரும்பும் (அ-பிரஸ)

ஸகலஸகாபன மந்திரி நீரந்தா காரியதரிசிக்கு பாராட்டு

கொழும்பு, நவ. 24

கொழும்பு கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் திரு கன்னாநகரா ஸகலஸகாபன சுகாதார மந்திரியின் நிரந்தரக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டமை பாராட்டும் நோக்காக ஒரு விருந்து வைக்கப்பட்டது ஸகலஸகாபன கமிஷனர் திரு வி. ஸி. ஜெயசூரியா தலைமை வகித்தார். சுகாதார ஸகலஸகாபன மந்திரி திரு எஸ. டபிள்யு ஆர் டி. பண்டாரநாயகா பேசுகையில் இன்றுள்ள நிலையில் எல்லா மக்களும் தேசத்துக்காக பாடுபடவேண்டுமென்றும் உண்மையும் கீழ்ப்படிவுமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றும் கூறினார் ஸகலஸகாபன அரசாங்க விளையாட்டுக்கழக பொதுக் காரியதரிசி திரு. எம். இராஜரத்தினத்தின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

ஜப்பானிய ஜவுளி வந்து சேர்ந்தது

கொழும்பு, நவ. 24

கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று வந்து சேர்ந்த ஒரு கப்பலில் 363 டன் ஜப்பானிய ஜவுளி வந்துள்ளது ஜப்பானிலிருந்து இலங்கைக்கு கிடைத்துள்ள மூன்றாவது ஜவுளி இறக்குமதி இதுவாகும். இந்த ஜவுளிகள் நிறுமன்னின்போது விற்பனைக்கு கிடைக்குமென்று கூறப்படுகிறது.

வருடத்திற்கு 15 கோடி 70 லக்ஷம் ரூபாய்

இலங்கையில் இருந்து பிரிட்டன் சுரண்டல்

இலங்கை சுதந்திர மசோதா பற்றி பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கருத்து

லண்டன், நவ 21

"இலங்கை சுதந்திரமசோதா" இரண்டாவது தடவையாக வாசித்து நிறைவேற்றப்பட்டபோது கமியூனிஸ்ட் பாராளுமன்ற அங்கத்தினரான பிள்ளை பிராட்டின் பின்வருமாறு தெரிவித்தார்

மசோதாவை ஆதரிக்கும் அதே நோக்கில் இம்மசோதா பூரண சுதந்திரத்தை அடையாதவர்களுக்கு ஆகும்என்றே நான் கருதுகிறேன். இச்சபை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் காருண்யத்தால் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்படுகிறது என்ற மாயஎண்ணம் கொள்ளக்கூடாது. ஏனெனில் இலங்கையிலும் அரசியல் சாபனரீதியாக அநியாயமான கோரிக்கைகள் எழுப்பட்டுள்ளன

ஒவ்வொரு வருடமும் 15 கோடி 70 லட்சம் ரூபா இலங்கையில் இருந்து பிரிட்டனுக்குக் கிடைக்கக் கொண்டிருந்தது. இதனை சபை மறந்து போகக் கூடாது.

சொரன்ஸன் அபிப்பிராயம்

தொழிற்கட்சி அங்கத்தினரான சொரன்ஸன் பேசியதாவது:-

இலங்கையில் வகுப்புவாதம் இல்லாமல் இல்லை எனவே சரி சமப வேலைபாடுகளை வெட்டி எறியும் சமியூனிஸத்தையே ஜனங்கள் விரும்பினர், அது இலங்கையின் சுதந்திரடிவே ஆகும்." (ராய்ட்டர்)

"நோயாளிகளைச் சமமாக நடத்த வேண்டும்"

கனிப்பட்ட வைத்தியர்கள் சங்க வருடாந்தக் கூட்டம்

கொழும்பு, நவ 24

கனிப்பட்ட வைத்தியத் தொழில் புரியும் வைத்தியர்களின் சங்க வருடாந்தக் கூட்டம் டாக்டர் ஈ. வி. ராத்னெம் தலைமையில் நடைபெற்றது இக் கூட்டத்தில் தலைவர் பேசுகையில், இப்பொழுது வைத்திய இலாகாவில் ஊழல்கள் அதிகரித்துவிட்டன என்றும் இதனைப்பற்றி சுகாதார மந்திரியே பேசியுள்ளாரென்றும் இதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க அவர் தெரிவிக்கிறார்களாவும் வைத்திய அதிகாரிகள் நோயாளர்களை தரதரக்கக் கேட்பு வைத்தியர்கள் கவனிக்கின்றார்களென்றும். எழைகள்-செல்வர்கள் எல்லோரையும் சமமாகக் கவனிக்க வேண்டுமென்றும் திறமை வாய்ந்த வைத்திய அதிகாரிகள் எல்லாவகை நோயாளர்களையும் சரிசமமாகவே பாவித்து நடத்த வேண்டுமென்பதை பாராளுமன்றம் கவனித்து வேண்டியமாற்றங்களைச் செய்யவேண்டுமென்றும் நம்பவதாகவும் கூறினார்

தொடர்ந்து இவர் பேசுகையில் வைத்திய அதிகாரிகளுக்கு முழு நோய் சம்பளமும் அரசாங்கத்தினால் கொடுக்கப்படவேண்டுமென்றும் இதனால் அரசாங்கத்துக்கு அதிக பணம் செலவானாலும் வருங் பயன் அதிகமாக இருக்குமென்றும் கூறியதுடன் ஆஸ்பத்திரிகளுக்கு விஜயம் செய்த நோயாளர்களைப் பார்வையிடும் வைத்திய அதிகாரிகளின் நிலைமைகள் பற்றி கண்டித்தும் கூறினார்.

வருங்கால திட்டங்கள்பற்றி பேசுகையில் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்துடன் போது சுகாதாரம், தேசிய சுகாதார இன்ஷுரன்ஸ் திட்டம் ஆகியவற்றை கொண்டுவர வேண்டுமென்றும் தாதிப் பெண்கள் தொழில்கள்பற்றி கறிப்பிடுகையில் தனிப்பட்ட ஒரு சபையினால் அவர்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் தொடர்ந்து பேசுகையில் கூறினார்.

சீனக் கரியபுனிஸ்டுகளுக்கு வெற்றிமேல் வெற்றி

ஷாண்டுங் கைவசமாயிற்று

மாஸ்கோ, நவ 22

இங்குள்ள டான்செய்ஸ்தாபனத்தின்பிரகாரம்கமியூனிஸ்டைகள் பீப்பிங் ஹாங்கோயில் பாதையில் 100 மைல் முன்னேறிச் சென்றுவிட்டனர். அரசாங்கத் துருப்புகள் 5000 நாசமாக்கப்பட்டன கமியூனிஸடுகளுக்கு பலமான சேதம் எதவும் ஏற்படவில்லை

கிழக்கு சைனாவில் கமியூனிஸடுகள் ஷாண்டுங்கை திரும்பவும் கைப்பற்றி விட்டார்கள் இதற்காக அவர்கள் 40 நாள் போராடினர். ஹோனானிலும் ஷான்ஸியிலும் அரசாங்கத் துருப்புகள் கமியூனிஸட் நெருக்கத்தைச் சமாளிப்பதற்காகக் குவிக்கப்பட்டு வருகின்றன.

[ராய்ட்டர்]

அரசாங்க குமாஸதாக்கள் சங்க நடவடிக்கை

வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ 24

கொழும்பு நகர மண்டபத்தில் நேற்று பிற்பகல் பொது அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தின் விசேஷ கூட்டமொன்று திரு. டி. எஸ் ஜெயவீர தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதம மந்திரி, அரசாங்க உத்தியோகஸதர் தொழிற் சங்க உரிமைகள் சம்பந்தமாக விடுத்த அறிக்கைபற்றியும் சங்கத்தின் நலச் சட்டங்கள் பற்றியும் ஆலோசனை நடத்தவே இக்கூட்டம் அமைக்கப்பட்டது

கூட்ட நடவடிக்கை ஆரம்பத்திலேயே இக்கூட்ட நிழ்ச்சிகளை இந்தினத்தில் எடுக்க வேண்டாமென்றும் அதனை ஒத்தி வைக்கும்படியும் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து 186 பேர் வாக்களித்தனர். 40 பேர் இதனை எடுக்க வேண்டுமென வாக்களித்தனர். அதோடு தற்காலிகமாக தலைவராக தெரியப்பட்டவரையும் தற்காலிக காரியதரிசியையும் டிசம்பர் மாதத்தில் ஒரு வருடாந்தக் கூட்டத்தைக் கூட்டி புதிய நிர்வாகக் கமிட்டியை தெரிந்து அதன் பின் இந்த நிழ்ச்சிகளை ஆலோசனைக்கு எடுக்க வேண்டுமென்றும் கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள் தெரிவித்தனர். இதன் பின் தற்காலிக தலைவர் திரு எஸ. டி. சில்வாவிடம் தலைவர் தமது கமிட்டியின் ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்

இச்சங்கத்தின் மாஜித் தலைவரான திரு. டி. பி. இலங்கரத்தினாவை இக்கூட்டத்தில் பேசும்படி அங்கு கூடியிருந்தவர்கள் கேட்டுக் கொண்டதன் மேல் அவர் பேசினார். இக்கூட்டக்கல் திரு வி. கந்தசாமியின் மரணத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

குழந்தையைக் காப்பாற்றியவருக்கு ரூ. 2500 பரிசு

கொழும்பு, நவ. 24

இலங்கை ரயில்வேயில் நாவலப்பிட்டியா பகுதியில் ரயில் டிரைவராக வேலை பழகும் திரு பி. ஸி. தென்னா என்பவர் தர்பிலிலாவிலுள்ள திரு ஜி. நந்தியாஸ் சில்வா என்பவரின் குழந்தையை ரயில் விபத்தினின்றும் காப்பாற்றியதற்காக பெருந்தொகையான மக்கள் அடங்கிய கூட்டத்தில் ரூ. 2500 பரிசாகக் கொடுத்தார். இவர் சிலாபத்திற்குச் செல்லும் ரயிலில் வேலை செய்துகொண்டிருந்த பொழுது ரயில் பாதையில் இருந்த அக்குழந்தையைக் காப்பாற்றினார் என்று கூறப்பட்டது.

ரஷியாவுக்கு அமெரிக்க விற்பனை

தடைசெய்யக் கூடாது என ட்ரூமன் கூற்று

வாஷிங்டன், நவ 21

அமெரிக்காவிடம் இருந்து பாரயந்திரங்கள் சிலவற்றை ரஷியா இப்போது விலைக்கு வாங்கிவருகிறது. அவ்விற்பனை மீது தடைவிதிக்க வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸில் சிலர் கோரினார்கள். ஆனால் ஜனாதிபதி ட்ரூமன் தான் அதனை எதிர்ப்பதாக கூறியுள்ளார். (ராய்ட்டர்)

மீன்பிடி தொழிற் அபிவிருத்தி திட்டம்

டைரக்டரின் மெட்டத்துக்கு ரூ 750,000 வேண்டுமாம்

கொழும்பு நவ 22

மீன்பிடி தொழிலின் எற்படும் அபிவிருத்திகள் சம்பந்தமாக மீன்பிடி இலாகா டைரக்டர் ஒரு திட்டம் வகுத்துள்ளார். இத்திட்டத்தின்படி ரூ 750 000 மீன்பிடி பகுதிக்கு செலவிடப்படும் என்று தெரிகிறது இத்திட்டப்படி முதல் வருடத்துக்கு ரூ 583 800 செலவிடப்படும் அடுத்த வருடத்துக்கு ரூ 170 000 செலவிடப்படும். மீன்பிடி தொழில் நிலையான அடிப்படையில் ஸ்தாபிக்கக் கொள்வதற்கு சர்வதிகார முறைப்படியான சில வேலைகளும் செய்யப்பட வேண்டுமென்று டைரக்டர் தெரிவிக்கின்றார். மீன்கள் சம்பந்தமான சாஸ்திர முறைகள், ஆராய்ச்சிகள், மருந்துக் குளிக்கல் மற்றும் அபிவிருத்தி வேலைகள் அடியனவற்றுக்கு இத்திட்டத்தில் டைரக்டர் இடம் வகுத்துள்ளார்.

அமெரிக்கப் பிரதேச ஜெர்மனியில் பஞ்சம்

தொழிலாளரின் கண்டன வேலை நிறுத்தம்

பிராங்போர்ட், நவ 21

ஜெர்மனியில் அமெரிக்கர் ஆக்கிரமிப்பட்டுள்ள பிரதேசத்தில் உணவு நிலைமை மிச்சீர்கேடு அடைந்துள்ளது. இதன் காரணமாக 70 ஆயிரம் ஜெர்மனியர் வரை ஓர் கண்டன வேலை நிறுத்தம் ஒரு மணித்தியாலத்துக்கு நடாத்தினர்

பிளோரன்ஸில் கிளர்ச்சி செய்யும் தொழிலாளர் ஓர் ரயில்வே ஸ்டேஷனை புகுந்து 5 மணித்தியாலங்களுக்கு அங்கிருந்தனர் போலிஸார் அவர்களை விரட்டி விட்டார்கள் சிலர் கைது செய்யப்பட்டனர்

[ராய்ட்டர்]

கனேடியர் சட்டவிரோதமாக எல்லையைக் கடந்தனர்

லண்டன், நவ 21

மாஸ்கோ ரேடியோ கனடாவின் ஓர் ராணுவத் தூதுக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் லெனின் கிராடிக்குச் சமீபம் சோவியத் எல்லையைக் கடந்து சட்ட விரோதமாக சோவியத் ரஷியாவில் புகுந்ததாக இன்று குற்றம் சாட்டியது.

பம்பாய் துறைமுகத் தொழிலாளர்

வேலை நிறுத்தத்தில் சமரச முடிவு

பம்பாய், நவ 22

இங்கு 8 தினங்களாக 3000 துறைமுகத் தொழிலாளர் செய்து வந்த வேலை நிறுத்தம் சமரசமாக முடிவுற்றது.

(அ-பிரஸ

இருட்டில் மூழ்கியிருந்த ரோம் நகரம்

அரசியல் கட்சிக் காரியாலயங்களின் வெடிகுண்டு வீச்சுகள்

கொழிந்கட்சிக் தலைவர் கொல்லப்பட்டதினால் ஏற்பட்ட கிளர்ச்சியெங்கும் குழப்பங்கள்

ரோம், நவ 22

சென்றவாரம் ஒரு சிலர் எண்ணிடக்கூடிய வெளிவிவகாரச் சங்கக் கலைவர் கொல்லப்பட்டதினால் ஒரு வாரகாலமாக இத்தாலியெங்கும் குழப்பங்கள் நடைபெற்று வருகின்றன கேந்திரவ இத்தாலி பிரதமமந்திரி டீனர் அல்லைட் டி காஸ்பெரியின் அரசியல் கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியின் ரோமாபுரி காரியாலயத்தில் வெடிகுண்டு வீசப்பட்டது காரியாலயம் சேதமடைந்தது அதற்குப் பின் தீவிர வலதுசாரிக் கட்சியான பாமாமனிகன் கட்சிக் காரியாலயத்திலும் வெடிகுண்டு வீசப்பட்டது மிலான் தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் காரணமாக நகர் இருட்டில் மூழ்கியிருந்த சமயம் இவ்விரு சம்பவங்களும் நடைபெற்றன. மதவாதம் சம்பவத்தில் சிலருக்குக் காயங்கள் ஏற்பட்டன.

கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி ரோமாபுரி காரியாலயத்தின் வெளியே ஒரு வெடிகுண்டு கிடந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அது சிறிதுநேரம் கழிந்து வெடிக்கும் குண்டாதலால் வெடிப்பதற்கு முன் அது அகற்றப்பட்டது இச்சம்பவங்களால் ஜனங்களிடையே திகில் ஏற்பட்டது

ஆசியா பொருளாதாரக் கமிஷன்

இன்று கூட்டம் ஆரம்பம்

புதுடில்லி, நவ. 22

ஆசியா பொருளாதாரக் கமிஷன் கூட்டம் பிலிப்பைன் தீவிலுள்ள பங்கினி நகரில் நவம்பர் 24-ம் தேதி கூடுகிறது. இந்திய சர்க்கார் வெளிநாட்டிலாக்கா காரியதரிசி திரு. அர். அர். சாக்ஸை இந்தியாவின் பிரதிநிதியாக விஜயம் செய்ய நேற்று அவர் விமானத்தில் இங்கிருந்து பயணமானார். இந்தக் கமிஷனுக்கு திரு லோகநாதன் காரியதரிசி இலங்கையின் சார்பாக திரு அமாசூரியா புறப்பட்டுச் சென்றிருக்கிறார். (அ-பிரஸ

கஞ்சா வைத்திருந்தவருக்கு மூன்று மாதச் சிறை

கொழும்பு, நவ 24

கொழும்பு ஜெம்பட்டா வீதியைச் சேர்ந்த எச். ஏ. வின் சென்ட் பெரைரா என்பவர் 1000 கிரேயின் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்கு கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் மூன்று மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

புத்திரர்களுக்கு சொத்து இல்லை

சமதர்மக்கொள்கையில்பற்றுள்ள தனவந்தர்

ஆஸ்திகளை தொழிற்கட்சிக்கும் வேலைக்காரிக்கும் அளித்தார்

ஹாரோகேட் (யார்க்ஷயர்) நவ. 22

இங்குள்ள ஓர் பெரிய தனவந்தரான திரு. ராபர்ட் ஆடிஹாப்கின்சன் இரண்டரை லக்ஷம் பவுண்களுக்கு மேற்பட்ட தனது ஆஸ்தியை பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்கு அளித்திருக்கிறார். அவர் இறப்பதற்கு முன்பே அந்த ஆஸ்தியை தொழிற்கட்சிக்குக் கொடுக்கும்படி தனது மரண சாசனத்தில் எழுதி வைத்திருக்கிறார். ஆஸ்தியிலிருந்து வரும் வருமானத்தை தொழிற்கட்சியின் சமதர்மக் கொள்கையை ஜனங்களிடையே பிரசாரம் செய்து பரப்பும் பொருட்டு செலவு செய்யும்படி எழுதியிருக்கிறார் அவரது வீட்டு வேலைக்காரிக்கு அவரது வீட்டையும், வீட்டிலுள்ள சாமான்களையும், அவர் சொந்த உபயோகத்திலிருந்த சாமான்களையும் எழுதி வைத்திருக்கிறார். அவரது இரு புதல்விகளும் ஒரு புத்திரிக்கும் யாதொருவிதமான சொத்தும் கொடுக்கவில்லை, [ராய்ட்டர்]

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை

ஐ. நா. சபைக்குப் புதிய தீர்மானம் இல்லை

நியூயார்க், நவ 21

தென்னாப்பிரிக்க இந்தியர்கள் நடத்தப்படும் முறை பற்றி இந்தியா புதிய தீர்மானம் எதுவும் பிரேரிக்காது என ஐ. நா சபையின் இந்திய தூதுக்கோஷ்டி அறிவித்துள்ளது. [ராய்ட்டர்]

குத்திக் கொலை

கொழும்பு, நவ. 22

லெகாரா காரா எனனுமிடத்தில் இருந்து இன்று கிடைத்துள்ள செய்திபடி ஜி. டி. ஸி குணசேகரா என்பவர் குத்திக் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது இதில் எதிரி அன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை சம்பவம் போலிஸ் ஸ்டேஷனில் இருந்து 3 மைல் தூரத்தில் நடந்தது என்று கூறப்படுகிறது,

'டெய்லிவொர்க்கர்' பத்திரிகையில் இளவரசி கலியாணச் செய்தி

நாற்பத்தேழே வார்த்தைகளில் பிரசுரம்

சுருக்கமாகப் பிரசுரம் செய்ததற்காக அறிவாளிகளின் பாராட்டு

லண்டன், நவ 22

இளவரசி எலிஸபெத் கலியாணத்தைப்பற்றிய செய்திகளை லண்டனிலுள்ள பத்திரிகைகள் பகுதி பக்கமாக நிரப்பி கொட்டை எழுத்துத் தலைப்புகளில் மிகப் பிரபல்யமாகப் பிரசுரம் செய்திருந்தன. ஆனால் "டெய்லி வொர்க்கர்" பத்திரிகை நேற்று நடைபெற்ற இளவரசியின் கலியாணச் செய்தியை நாற்பத்தேழே வார்த்தைகளில் பிரசுரம்செய்திருந்தது இச்செயலைப் பாராட்டி அப்பத்திரிகைக்கு அறிவாளிகளிடமிருந்து வந்த செய்திகளை இன்று அப்பத்திரிகை பிரசுரித்திருக்கிறது கலியாணச் செய்தியைவிட, அதை ஆடம்பரமாகப் பிரசுரிக்காததைப் பாராட்டி அனுப்பப்பட்ட செய்திகள் பத்திரிகையில் மும்மடங்கு அதிகமாகப் பிரசுரமாயிருக்கிறது ஜனங்களுக்கு வேண்டிய மற்ற முக்கியமான செய்திகளை யெல்லாம் ஒதுக்கிவிட்டு கலியாணச் செய்திகளை அதிகமாகப் பிரசுரித்தமற்றப் பத்திரிகைகளைப் பின்பற்றாமல் 'டெய்லி வொர்க்கர்' அதை சுருக்கமாக வெளியிட்டதைப் பாராட்டி செய்திகள் வந்துள்ளன.

[ராய்ட்டர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாடுகள் எல்லாம் நீங்கும்

இந்திய சர்க்கார் முடிவு சீக்கிரத்தில் வரும்

டிசம்பர் முதல் தேதியிலிருந்தே அமுலுக்கு வரலாம்

புதுடில்லி, நவ. 20

உணவுப் பொருள்கள் மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்குவது பற்றி இந்திய சர்க்கார் தங்கள் முடிவை ஒன்றிரண்டு தினங்களில் தெரிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் கிராமப் பிரதேசங்களிலும் சிறு நகரங்களிலும் பங்கீட்டை எடுத்து விடுப்படி மாகாண சர்க்காருக்கு இந்திய சர்க்கார் யோசனை கூறக்கூடும். அநேகமாக டிசம்பர் முதல் தேதியிலிருந்தே இதை அமுலுக்குக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்ளப் படலாமென்று தெரிகிறது.

பாகிஸ்தான் தலைநகரில் துணிகரக் கொள்ளை

இந்தியா பாங்கியிலிருந்து ரூ. 5,70,000 அபேஸ்

கராச்சி, நவ. 21

கராச்சியிலுள்ள பண்டர் ரோடியிலிருக்கும் இந்திய பாங்கியில் இன்று காலை 10 மணிக்கு துணிகரக் திருட்டு ஒன்று நடந்தது. ரூபாய் 5,70,000 இருந்த பணப்பையை பாங்கி பியூனிடமிருந்து திருடர்கள் பறித்துக் கொண்டு மோட்டாரில் போய் விட்டனர்.

மோட்டாரில் சென்ற 4 திருடர்கள், பியூனை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக கூறப்படுகிறது. இந்திய ரிஸர்வ் பாங்கியில் பணத்தைச் செலுத்துப் பொருட்டு இந்திய பாங்க் காஷியரும், பியூனும் வந்து கொண்டிருக்கையில் இந்த திருட்டு சம்பவம் நடைபெற்றது.

காந்திஜி மீது புஷ்ப மாரி

ராஜாஜியின் பரமானந்தம்

புதுடில்லி, நவ. 20

இன்று சர்க்கார் மாளிகைக்கு மகாத்மா காந்தி விஜயம் செய்தார் சிறிது காலமாய் தேவ அசௌக்கியமாக இருக்கும் ஐ. மா. கவர்னர் சரோஜினி தேவியை அவர் பார்த்தார். ஆக்டிங் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியையும் காந்திஜி சந்தித்தார்.

சர்க்கார் மாளிகையில் காந்திஜி நுழைந்தபோது அவர்மீது ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி புஷ்ப மாரி பொழிந்தார். சரோஜினி தேவியின் குமாரி ஸ்ரீமதி பத்மஜா நாயுடுவும் காந்திஜி மீது மலர்களை வர்ஷித்தார்.

ஆக்டிங் கவர்னர் ஜெனரலாக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி பதவி ஏற்றபின் சர்க்கார் மாளிகைக்கு இப்போதுதான் முதன் முறையாக காந்திஜி விஜயம் செய்தார். —(யு-பி)

நேரு ஜியின் ஜனன தினக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 22

வண்ணார்பண்ணை நேதாஜி வாசிகசாலையில் வண்ணார்பண்ணை மருத்துவ இளைஞர் சங்கம் சார்பில் திரு கே. சுப்பிரமணியம் தலைமையில் நேருஜியின் ஜனன தினக் கொண்டாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. திரு கே. கணபதிபிள்ளை நேருஜியின் சரித்திரத்தைப் பற்றிக் கூறிய விடத்து சுதந்திர இந்தியா பெருமையுடன் கொண்டாடும் முதல் ஜனன தினம் என்று குறிப்பிட்டார்.

அரிசி கடத்தியவருக்கு அபராதம்

மட்டக்களப்பு, நவ. 22

காத்தான்குடியில் உள்ள ஐ முகம்மது லெப்பை என்பவர் 15 கொத்து அரிசியை கள்ளத்தனமாக கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் எதிரிக்கு மட்டக்களப்பு நீதிபதி திரு பி ஸ்ரீ கந்தராஜா ரூ 25 அபராதம் விதித்தார்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

திரை மறைவில் சதியாலோசனை

பௌரவமற்ற நடவடிக்கை

சுதந்திர மசோதாவும் இலங்கையின் எதிர்காலமும்

நவம்பர் 21-ம் தேதி மாலை வெளிவந்த 'லங்காதீப' என்னும் பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்:

இலங்கைப் பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெறுவதற்காக உடன்படிக்கைகளுடன் கூடிய 'இலங்கை சுதந்திர மசோதா' வை சமர்ப்பிக்கப்படும். அப்பொழுது மேற்படி மசோதாவிற்கு அதிகப்படியான சம்மதத்தைப் பெற முடியாவிடில் பார்லிமெண்டை கலைக்க வேண்டி நேரிடுமென்றும், அப்படி கலைக்கப்பட்டால் மறுபடியும் தேர்தலுக்கு முன்னிற்க விருப்பக் கூடிய அங்கத்தவர்கள் மிகவும் சிலரே யென்றும், ஆனபடியால் இலங்கை சுதந்திர மசோதா சம்மதத்தை பெறுவது முடியாத காரியமல்லவென்றும், சென்ற திங்கட்கிழமை எழுதியிருந்தோம். (இக்கட்டுரை 19-11-47 சுதந்திரனில் பிரசுரமாய் இருக்கிறது)

எனினும், சில சட்ட நிபுணர்களின் ஆலோசனையின்படி இச்சுதந்திர மசோதா விவாதத்தின் போது, ஒரு சமயம் அரசாங்கக் கட்சியினர் தோற்றுப் போனாலும் கூட பார்லிமெண்டைக் கலைக்க அதிகாரம் இல்லையென்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி யெல்லாம் தர்க்கம் செய்து மாரடிப்பதில் ஆவதொன்றுமில்லை இங்கே மற்றெல்லாவற்றிலும் பார்க்க முக்கியமாக கவனிக்க வேண்டியிருப்பதானது, எங்கள் தாய் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியே. தேசத்தின் சார்பாக முனைந்திற்கும் ஒரு சிலரின் சுயலாபத்தையும் பட்டம் பதவியைப்பற்றியும் அல்ல; இதற்கெல்லாம் என்ன அவசரப்?

இத்தேசத்தின் சார்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு உறுதியளிக்கப்பட்டிருக்கும் உடன்படிக்கைகளையும், இவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட சுதந்திரமசோதாவும் ஆகிய இவைகளை பொது மக்களுக்குத் தெரியாமல், இவற்றில் அடங்கியிருக்கும் விஷயங்களைப் பற்றி எள்ளளவேனும் வெளிக்குக் தெரியாமல் 'குசு குசு' கொள்கையை அனுசரிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஜூன் மாதத்திலிருந்து இதுவரைக்கும், இந்த கடைசி நேரம் வரைக்கும்-இதற்கு நிந்தனையான-திமிரான பௌரவமற்ற கொள்கையை பின்பற்றி அவசரமாக நடந்து கொள்ள வேண்டிய அவசியமென்ன? காரணமென்ன? இங்கிலாந்து ஒரு பலம் பொருந்திய ஏகாதிபத்தியம்; இலங்கை, இங்கிலாந்தின் குடியேற்ற நாடேயாகும்.

இந்நிலைமையில், இங்கிலாந்திற்கும் இலங்கைக்குமிடையே தயார் செய்யப்பட்டுள்ள உடன்படிக்கையில், சாம்ராஜ்ய-குடியேற்ற நாடு என்ற அந்தஸ்தலே தான் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. இது சுதந்திரமான இரு நாடுகளுக்குமிடையே இருக்கும் சம்பந்தமல்ல கிடைக்கப்போகிறதென்று சொல்லப்படும் 'சுதந்திரம்' உள்ளிட்ட இந்த மசோதாவை தயாரிக்கப்பட்டது, உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட பின்னரே யென்பதை ஒவ்வொருவரும் குறித்துக்கொள்ள வேண்டும்.

இந்தியாவிற்கோ, கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்கோ "சுதந்தரம்" கொடுத்திருப்பது, இப்படியான உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடப்பட்ட பின்னரல்லவென்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

உடன்படிக்கை மூலமாக பெறும் சுதந்திரமும் இல்லையென்று நாம் கூறவில்லை. எனினும், அந்நிய நாட்டுத் தொடர்பு, யுத்தக் காரியங்கள், முதலியவற்றைப்பற்றி ஒரு காலவரையறையிறை செய்யப்படும் உடன்படிக்கை என்னதானென்றும், அவற்றிற்கு கைச்சாத்திடுமுன், பொது மக்களுக்கு சொல்லாமல் - தெரிவிக்காமல் - செய்யப்படுவதற்குண்டான நியாயம் என்ன? கண்டிப்பு என்ன? கைச்சாத்திட்டபின், கைச்சாத்திடப்பட்டு விட்டதற்காக இப்பொழுது, ஏதாவது குறை குற்றம் இருப்பினும், இதை ஏற்றுக்கொள்ளுவோமென்று யாரொரு மெதாவி சொல்லுவாராகில், அவர் பொது மக்களின் சார்பாக வாதாடவும் - பொறுப்பேற்றுக் கொள்ளவும் தகுதியுடையவரல்ல.

இந்தப் பிரச்னை சம்பந்தமாக முக்கியமாக கவனிக்க வேண்டிய காரியம் ஒன்றிருக்கிறது. மேற்படி உடன்படிக்கை சம்பந்தமாக முன்னின்றுழைத்த திரு சேனநாயக்கா, ஸர், ஒலிவர் இவ்விருவரும் சிலாகிக்க கூடியவாறு சட்ட ஞானத்தில் நிபுணத்வம் பெற்றவர்களென்ற பிரசித்திபெற்றவர்களல்ல அப்படியாயினும் கூட இந்த பாரதூரமான பிரச்னை சம்பந்தமாக - உடன்படிக்கை சம்பந்தமாக - யாரிடம் ஆலோசனை பெற்றார்கள்? இந்த சட்ட ஆலோசனையைச் சொன்ன சட்ட நிபுணர்கள் யார்தானென்று இன்றுவரையும் யாருக்கும் தெரியக் கூடியதாயில்லை.

எனினும் தற்செயலாக தவறுதலான சொற்கள் இந்த உடன்படிக்கையில், இது சுதந்திரம்தானென்று இருக்கும் பிரமாணத்தில் ஒரு சமயம் குறிக்கப்பட்டிருந்தால், அதனால் எதிர்காலத்தில் உண்டாகப் போகும் அனர்த்தமும் சிக்கலும் இவ்வளவுதானென்று சொல்ல முடியாது. அப்படி சிக்கலானதும் அனர்த்தமானதுமான சொற்கள் எத்தனையோ அந்த உடன்படிக்கையில் இருக்குமென்று எண்ணுவதற்கு இதுவரைக்கும் நாம் காட்டியிருக்கும் காரணங்களிலிருந்து வெளியாகிறது

ஆனபடியால், மறுபடியும் ஒரு தேர்தலை உண்டாக்கி இரண்டும் செய்ய ஏற்படின், மேற்படி உடன்படிக்கையையும், புதிய சுதந்திர மசோதாவையும் ஒப்புக்கொள்வதற்கு தேச மக்களின் சார்பாக நிற்கும் எந்த பிரதிநிதிக்கும் சந்தர்ப்பம் உண்டாகாதென்று முன்கூட்டியே சொல்ல விரும்புகிறோம்

சாவகச்சேரி கோர்ட்டில் வழக்குகள்

சாவகச்சேரி, நவ 22

புகையிரதத்தில் பிரயாணம் செய்த ஆறு பிரயாணிகள் வண்டிக்குள், காசுக்கு பொம்மை விளையாட்டு ஆடினார்கள் என்று குற்றம் சாட்டிக தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

* * *

சமீப பாராளுமன்ற தேர்தலில் ஆள் மாறாட்டமாக வாக்களித்ததாக இருவர் மீது குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளுக்கு கோர்ட்டு கலையும் வரை சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

* * *

சாவகச்சேரியிலுள்ள அடைவு கடையொன்றில் கள்ளப் பெயர் கொடுத்து அங்கு அரிசி வாங்க முயன்றதாக குற்றஞ் சாட்டி சின்னத்தம்பி நாகமுத்தன் என்பவர் மீது கொண்டுவரப்பட்ட வழக்கில் எதிரி மூன்று வருடத்துக்கு ரூ. 100 தண்டனையாக பிணையில் விடப்பட்டார்.

இந்திய பாராளுமன்றம்

வெளி நாட்டு இந்தியர்கள்

பண்டித நேரு அறிக்கை

கைத்தொழில் நிதி கார்ப்பொரேஷன்

புதுடில்லி, நவ 21

இன்று இந்தியா பாராளுமன்றத்தில் வெளிநாட்டு இந்தியர்கள் சம்பந்தமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பண்டித நேரு பதிலளித்தபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியர் குடியேற்ற ஒப்பந்தம் சம்பந்தமாக பர்மாவுடன் கூடிய சீக்கிரம் சமரசப் பேச்சு ஆரம்பிக்கப்படும் டிசம்பர் மாத ஆரம்பத்தில் பர்மா பிரதம மந்திரி டில்லிக்கு வருகிறார். பர்மாவில் ஆஸ்திகளையுடைய அநேக இந்தியர்கள் யுத்தம் முடியவும் இந்தியாவுக்கு திரும்பி வந்திருக்கின்றனர். பொதுவாக ஏராளமான இந்தியர்கள் வெளிநாடுகளிலிருப்பதை இந்திய சர்க்கார் விரும்பவில்லை. நிரந்தரமான தொழில்களையுடையவர்கள் மட்டுமே வெளிநாடுகளிலிருக்கலாம் இன்றேல் இந்தியாவின் மதிப்புக்கு பங்கமேற்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் இந்தியருக்கு விரோதமாக பிரசாரங்களும் நடவடிக்கைகளும் நடைபெறுவதாக அடிக்கடி இந்திய சர்க்காருக்குத் தகவல் கிடைத்து வருகிறது. ஈரானிலுள்ள இந்தியர்கள் தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி இந்திய சர்க்காரிடம் முறையிட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக ஈரான் சர்க்காருடன் கலந்து பேசி பாதுகாப்புக்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது இவ்விஷயத்தைக் கவனிக்கும்படி ஈரானில் நியமிக்கப்பட்ட இந்திய ஸதானிகருக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது

மிகப் பொறுப்பு வாய்ந்ததவி வகிக்கும் இந்திய ஸதானிகர் அந்நியப் பெண்களை மணம் புரிவது உசிதமல்ல. ஆனால் அப்படி செய்வதற்குத் தடை எதுவுமில்லை. ஆனால் அப்படிப்பட்டவர்களை ஸதானிகராக நியமிப்பதுபற்றி சிரமமேற்படும்

கைத்தொழில் நிதி கார்ப்பொரேஷன்

நிதி மந்திரி கொண்டு வந்த கைத்தொழில்நிதி கார்ப்பொரேஷன் மசோதா பரிசீலனைக் கமிட்டியின் ஆலோசனைக்கு விடப்பட்டது உள்நாட்டு மந்திரி கொண்டுவந்த அந்நியர் கட்டுப்பாட்டுச் சட்டமும் நிறைவேறியது தொழிலாளர் அரசாங்க இன்ஷூரன்ஸ் மசோதாவை தொழில் மந்திரி கொண்டு வந்து விவாதித்ததபோது சபை நாளைக்கு ஒதுக்கி வைக்கப்பட்டது.

கிழக்கு பாகிஸ்தானில் பௌத்தர்கள் துயரம்

கிழக்கு வங்க சர்க்காருடன் பேச பர்மா அதிகாரிகள் வருவர்

ரங்கூன், நவ. 21

பாகிஸ்தானிலுள்ள பர்மிய மைனாரிட்டிகள் கிளப்பியுள்ள சில பிரச்னைகள் பற்றி கிழக்கு வங்க அதிகாரிகளுடன் விவாதிப்பதன் பொருட்டு பர்மா சர்க்கார் அதிகாரிகள் சீக்கிரமாக டாக்கா செல்வர்.

சிட்டகாங்கிலும் இதர ஜில்லாக்களிலும் தலைமுறை தலைமுறையாக வசித்துவரும் சுமார் 50,000 பௌத்தர்களான பர்மிய மைனாரிட்டியினர், பாகிஸ்தான் அதிகாரிகள் தங்களை பாரபட்சமாக நடத்துவதாக பர்மா சர்க்காரிடம் புகார் செய்து கொண்டுள்ளதாக பர்மிய அதிகாரி ஒருவர் இன்று கூறினார்

பாக்கிஸ்தானிலுள்ள இதர முஸ்லிமல்லாதார்களுக்கு உள்ளதைப்போன்ற கஷ்டங்களே தங்களுக்கும் இருப்பதாக பௌத்த மைனாரிடியினர் கூறுவதாக அவ்வதிகாரி கூறினார்

நிலைமை பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை யென்றும் கிழக்கு பாகிஸ்தான் சர்க்காருடன் கலந்தாலோசித்து ஒரு சுமுகமான சமரஸம் ஏற்படுத்துவதன் பொருட்டு டாக்காவிற்கு சென்று நிலைமையை நேரிலேயே ஆராய பர்மா சர்க்கார் உத்தேசித்துள்ளதாகவும் அவ்வதிகாரி கூறினார்.

அணுக்குண்டு தொழிற்சாலையில் ஒற்றுவேலை

யுத்தகாலத்தில் நடைபெற்றதாம்

வாஷிங்டன், நவ 22

அமெரிக்க அணுக்குண்டு தொழிற்சாலையில் எல்லா விரோத நாடுகளில் இருந்து ஒற்றர்கள் வேலை செய்து வந்ததாக ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதி இன்று குறிப்பிட்டார் யுத்தகாலத்தில் விசேஷ நடமைகளுக்காக அங்கு சென்றபோது இதனை தாம் கண்டுபிடித்ததாக அவர் கூறினார். (ராய்ட்டர்)

லார்டு மவுண்ட்பேட்டன்

லண்டன், நவ 21

இளவரசி எலிஸபத் கலியாணத்திற்கு வந்திருந்த இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட்பேட்டனும் லேடி மவுண்ட்பேட்டனும் நாளை இந்தியாவுக்குத் திரும்பிச் செல்கிறார்கள். இன்றிரவு இந்தியா ஹைகமிஷனர் திரு. வி கே. கிருஷ்ண மேனன் அவர்களுக்கு இந்தியா மாளிகையில் ஒரு பிரிவுபசார விருந்தளித்தார். இவ்விருந்துக்கு பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் மற்ற மந்திரிகளும் அந்நிய நாடுகளின் ஸதானிகர்களும் பாகிஸ்தான் ஹைகமிஷனரும் மற்றும் பிரமுகர்களும் வந்திருந்தனர்.

எண்ணெய் ஒப்பந்தத்தைப் பாரசீகம் மீறியது

சோவியத் குற்றச்சாட்டு

மாஸ்கோ, நவ 21

வடக்கு பாரசீகத்தில் ரஷியாவுக்கு எண்ணெய்ச் சுரங்க உரிமைகள் முன் ஓர் ஒப்பந்தப் பிரகாரம் வழங்கப்பட்டது அதனை ஊர்ஜிதம் செய்ய பாரசீகம் மறுத்து விட்டது. இது சம்பந்தமாக சோவியத் அரசாங்கம் பிரிட்டனுக்குத் தெற்கிலே எண்ணெய் கொடுக்கும் பாரசீகம் எம்மிடம் பாரபட்சமாக நடந்துகொள்ளும் விரோத மனப்பான்மைக்கு நாம் கண்டனம் தெரிவிக்கிறோம்" என்று கூறியுள்ளது. அத்துடன் ஒப்பந்தத்தை வீசி எறிந்ததால் இது நம்பிக்கைத் துரோகமாகும் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது. (ராய்ட்டர்)

வல்லரசுகளின் விசேஷ அதிகாரம்

கொழும்பு, நவ. 21

தீர்மானங்களை ரத்தாக்கும் வல்லரசுகளின் விசேஷ அதிகாரம் பற்றிய பிரச்னை சிறிய பொதுச் சபையால் கவனிக்கப்படவேண்டும் என்னும் தீர்மானம் இன்று நிறைவேற்றப்பட்டது. 38 வோட்டுகள் சாதகமாகவும் 6 வோட்டுகள் பாதகமாகவும் கிடைத்தன. இந்தியா பாகிஸ்தான் உள்ளிட்ட அராபிய தேசங்கள் நடு நிலைமை வகித்தன. (ராய்ட்டர்)

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை

அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் நோதெனக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்க்கு பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்திய பூஷணி AYUR. Dr. V. K. S. செல்லைப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக் கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார் அவர் இம்மாதம் (19-ந்தேதி) தொடக்கம் எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாக தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்களுடன் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு, கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

பிரிட்டனின் ஒன்றும் நம்பர் வாடிக்கைக்காரர்

லண்டன், நவ. 21

இந்தியாவும் பாகிஸ்தானும் பிரிட்டனின் ஏற்றுமதி வாடிக்கைக்காரரில் முதலாவது ஸ்தானத்தை ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் அடைந்தன இந்தியாவும் பாகிஸ்தானும் 2 கோடி 60 லட்சம் பவுண் பெறுமதியான பொருட்களை இறக்குமதிசெய்துள்ளன.

சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மைப் புத்துயிர் கொடுத்து காப்பாற்றியது

நீரு வ கந்தசாமி, ஆசிரியர் சிலாபம்; சொல்லுவதாவது:-

பல நாட்களாய் சகிக்க முடியாத தலையிடி, தலை வலி, நோவு, தும்மல் முதலிய உபாதைகளால், அவதியுற்று, பலவித சிகிச்சைகள் செய்தும், சுகங்காணாது, கடைசியாகத் தங்களின், சிரநேத்திராஞ்சனத் தைலத்தை எடுப்பித்து சில தடவை பாவித்த மட்டில் பூரண சுகத்தைப் பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வகுணத்தை நிற்கும், நிறமைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், இதன் நற்குணத்தை, மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

நீரு. வ. கந்தசாமி ஆசிரியர்,
சைவ பாடசாலை,
சிலாபம்.

சிரநேத்திராஞ்சனத் தைலம்

கண்புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், காலஇடி தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவிர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபகசக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம் நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலுங்கடிதமூலமும் விபரம் தெரிந்து கொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ 3-25
4 " " " 5-50

தயாரிப்பாளர்:-

M. K. ஜெகநாதன்,
யூநானி கண் வைத்தியர்
பெரியகடை, யாழ்ப்பாணம்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது

இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுட்டோல் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நன்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து, விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ் சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

கவலையேன்?

ஐயா,

சமீபத்தில் "சுதந்திரன்" பத்திரிகையில் 'ஓர்டர்-இன்-சவுன்ஸில்' எனும் பதத்திற்கு "மந்தண ஆணை" என்று தமிழில் வெளியிட்டிருந்தீர்கள். இதையிட்டு தமிழ் தெரியாத ஒரு ஆசிரியர் மிகுந்த கவலை கொண்டுள்ளார். தமிழ் மக்களுக்கு இது விளங்காவிடினும் எனது கூறாமல் கூறியுமிருக்கிறார். தமிழனுக்குத் தமிழ் பதம் நன்று விளங்கும்.

சென்ற 1939-ம் ஆண்டில் இலங்கையிலுள்ள ஒரு தமிழ் தினசரியில் வேலைபார்த்த ஒரு மொழி பெயர்ப்பாளர் 'எஸ்பிளனேட்' என்னும் பதத்தை 'எக்ஸ்பிளனேட்' எனஎழுதியதற்காகவேலை நீக்கஞ்செய்யப்பட்டார் அவருக்கு அச்சொல்லுக்குத் தமிழ்ப் பதம் முற்றவெளி என்பது தெரியவில்லை அதுவுமல்லாமல் ஆங்கிலப் பதமாகிய 'எஸ்பிளனேட்' என்பதை 'எஸ்பிளனேட்' என்று சொல்லிக்கொள்ள தெரியவில்லை

தமிழ்ப் பத்திரிகைத் தொழிலில் இந்த மாதிரியானவர்கள் ஈடுபட்டுள்ள காலத்தில் நல்ல தமிழ்ப் பதங்களை ஒருவர் உபயோகித்ததால் அவர்களுக்குக் கவலை ஏற்படத்தானே செய்யும்.

ஆனால் உண்மைத் தமிழ சந்தோஷப்படத்தான் செய்வர்.

இங்ஙனம்,
சி. கந்தையா.
யாழ்ப்பாணம். 22-11-47

இரு மாணவர்களை போலிஸார் கைது செய்தனர்

கொழும்பு, நவ. 24

கொழும்பு மாளிகாகந்தை பகுதியில் நடைபெற்ற எஸ்.எஸ்.ஸி பரீட்சையின்போது குறிப்பிட்ட இலக்கமுடைய அபேட்சகர் ஒருவருக்குப் பதிலாக வேறு ஒருவர் அப்பாடத்தை எழுதுவார் என்று அந்த இடத்திய மேற்பார்வையாளருக்கு ரகசிய கிடைத்ததன் பேரில் விஷயம் போலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. போலிஸார் இதில் சம்பந்தப்பட்ட இருவரையும் பின் தொடர்ந்துள்ளனர். பரீட்சை நடந்து கொண்டிருக்கையில் குறிப்பிட்ட பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறு ஒருவர் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இருவரையும் போலிஸார் கைது செய்து கொழும்பு அடிவுனல் மாஜிஸ்டிரேட முன் ஆஜர் செய்தனர். ஒரு மாணவன் கொழும்பில் உள்ள ஒரு கல்லூரியில் படிப்பவர் மற்றவர் எஸ்.எஸ்.ஸி பரீட்சையில் பங்கு பற்றிய அபேட்சகர். இருவரையும் 28-ம் தேதி வரையும் தலா ரூ. 200 பிணையில் போகுமாறு விடுதலை வசாரணையை ஒத்தி வைத்தார்.

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை

நியூயார்க், நவ. 22

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை சம்பந்தமாக ஐக்கிய தேச பொதுச்சபையில் ஏற்பட்ட முட்டுக்கட்டையான நிலைமையைக் தவிர்க்க அமெரிக்கா செய்த முயற்சி பலனளிக்கவில்லை (ராய்ட்டர்)

சுதந்திர பட்டாணிஸ்தான்

எல்லை பிரதம மந்திரி புரளி

ஆப்கன் பிரமுகர்கள் அறிக்கை

புது, நவ 22.

"எல்லைப் புறத்திலுள்ள பட்டாணியர் சுதந்திர சர்க்கார் ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் இவர்களுக்கு ஆப்கானிஸ்தான மக்கள் வேண்டிய எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும்" என புது வந்திருக்கும் சீஆ கானிஸ்தான பிரமுகர்கள் ஒரு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

சர்தார் ஹபீஸ உல்லாகான் சர்தார் இஸைத் உல்லாகான், சர்தார் ஹபீப் உல்லாகான், சைபுக் முகர்மது யாகூப் என்பவர்களே இந்த 4 பிரமுகர்களும் இவர்களின் அறிக்கை மேலும் கூறுவதாவது:-

சுதந்திர பட்டாணியஸ்தான் எல்லைப்புறத்தில் ஏற்பட வேண்டுமென்பதற்காக தங்கள் உயிரையே கொடுக்க 100க்கு 90 பட்டாணியர்கள் தயாராக இருக்கிறார்கள். தங்களுக்கு ஆப்கானிஸ்தான மக்கள் உதவ வேண்டியது அவர்களது கடமையாகுமென அவர்கள் கருதுகின்றனர்.

கையும் புரளி

காஷ்மீர் பற்றி எல்லைப் பிரதமர் கையும் விடுத்த அறிக்கை காமோசமானது பாகிஸ்தானுக்காக காஷ்மீரைத் துக்கச் சென்று பட்டாணியர் போராட அவசியமோ காரணமோ இல்லை.

இலங்கைத்துக்கே ஆபத்து என்று கையும் அடிக்கடி கதறுகிறார் இது அபத்தமான கூச்சல் இலங்கைத்துக்கு ஆபத்தே இல்லை 1941-42ல் ஜாபானுக்கள்ளு ஜெராக்குக்கள்ளு பிரிட்டிஷாருக்காக பாஞ்சால மஸலிம் துருப்புகள் முன்னேறினார்கள் அப்போது இலங்கைத்துக்கு ஆபத்து ஏற்படவில்லையா? கையும் அப்போது கதறுவதுதானே? உள்ள நிலைமை ஒப்பிடியே நீடித்துக்கொண்டு போனால் இது பெரும் நாசத்தில் கொண்டுபோய்விடும் இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் எல்லைப்புற பட்டாணிய மக்களுக்கு சுதந்திர சர்க்கார் ஸ்தாபிதமாக வேண்டும், இல்லையேல் தெற்பட்டாணியர்களுள்ளே பெரும் பூசலை உண்டுபண்ணும். இந்தியா,பாகிஸ்தான் ஆகியவை சுதந்திரமாக இருக்க உரிமை உண்டென்றால் பட்டாணியஸ்தானுக்கும் அந்த உரிமை உண்டு.

மோட்டார் சைக்கிள் விபத்து

காயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, நவ 24

காவல்த் தோட்ட போலீஸ் பகுதியில் ஒரு மோட்டார்சைக்கிள் விபத்து நடந்தது. விபத்தில் அகப்பட்ட திரு எச் எல் பெரேரா, என்பவர் பல காயங்களுடன் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மழை அதிகமாகபெய்து கொண்டிருந்தபோது திரு. பெரேரா, ஒரு லெறியுடன் மோதண்டதாக கூறப்படுகிறது. விபத்து பற்றி போலிசார் விசாரணை நடத்துகின்றனர்.

போரினிடையே பொதுத் தேர்தல்

சீனாவின் முதலாவது வாக்களிப்பு

ஷாங்காய், நவ. 21

சீனாவின் சரித்திரத்திலே முதலாவது தடவையாக இன்று தேர்தல் ஆரம்பித்தது ஆனால் இத தேர்தலில் பங்கெடுக்க முடியாதபடி கம்யூனிஸ்டு கட்சியும் மதியக் கட்சியான ஜனநாயகக் கட்சியும் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளன.

மேலும் கம்யூனிஸ்டுகள் நடத்தி வரும் உள்நாட்டுப் போரின் காரணமாக சீன மக்களிடை வாக்குப் பேருக்கு வாக்களிப்பில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தலில் கலந்து கொள்ளும் மூன்று கட்சிகள் பிவைமாறு:- (சியாங்-கை-ஷேக்கின்) கூமின்டாங் கட்சி, இளஞ் சீன கட்சி, ஜனநாயக சோஷியலிஸ்டு கட்சி.

சீன உள்நாட்டுப் போர் ஹோபேயில் தீவிரமாக நடந்து கொண்டிருக்கிறது.

விவசாயிகள் கடன் நிவாரணம்

பர்மா சர்க்கார் நடவடிக்கை

ரங்கூன், நவ 22

விவசாயிகள் சுபீட்சத்திற்கு பிரசாரம் செய்ய சர்க்கார் 4 வருடத் திட்டம் போட்டிருக்கிறார்கள் யுத்தகதிற்கு முன் விவசாயிகள் வாங்கியிருந்த கடனகளை சர்க்கார் ரத்து செய்து விட்டனர். யுத்தத்துக்குப் பின் வாங்கிய கடன்களை அவர்கள் 1952வது வருடம் வரை திருப்பி கொடுக்க தவணை அனுமதித்திருக்கின்றனர் விவசாயிகள் கடன் பளுவைக் குறைக்க கடன் சமரச சபை ஏற்படுத்தப்படும்.

பாமாவுக்கு பிரிட்டன் அளித்த 4 ராணுவ விமானங்கள் இன்று வந்து சேர்ந்தன பர்மா பௌத்த தூதுக்குழுவியொன்று பர்மிய சீகிரீசைனுவுக்குச் செல்லும் சீன பாஷை தெரிந்த பர்மிய பௌத்த பிக்குகள் சைனாவுக்குச் செல்வார்கள் (ராய்ட்டர்)

எதிர்க்கட்சியினருக்கு போலிஸார் விண்ணப்பம்

கொழும்பு, நவ 24

இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினருக்கு தடை செய்யப்பட்ட போலிஸார் ஜண்டுகள், கான்ஸ்டபிள்கள் சங்கத்தின் அங்கத்தினர் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் அவர்கள் தங்கள் சங்கம் கலைக்கப்பட்டதும் அதன் பிரதான தலைவர்கள் அங்கத்தவர்களாவது இடங்களுக்கு மாற்றப்பட்டதும் தங்கள் சங்கத்தலைவர்களை எடுக்க கையாளப்பட்ட முறைகள் பற்றியும் தெரிவித்துள்ளனர். மேலும் இலங்கை போலிஸ் படையினருக்கு மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் கூட வழங்கப்பட மறுக்கப்படுவதாகவும் தாங்கள் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் கவனிக்கப்படவில்லையென்றும் தங்கள் உரிமைகளை பெற்றுக்கொடுக்க எதிர்க்கட்சிகள் உதவ புரிய வேண்டுமென்றும் மகஜரில் மேலும் குறிப்பிடுள்ளனர்.

காஷ்மீர் நிலைமை

புதுடில்லி, நவ 22

பூஞ்சில் எதிரிகளால் வளையப்பட்ட காஷ்மீர் ஜம்முதருகளை-இந்திய துருப்புகள் நேற்று தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு விட்டனர். கொட்லி பிரதேசத்தில் இந்திய துருப்புகள் முன்னேறி வருகின்றன. ஊரி பிரதேசத்திலாக்கவந்த எதிரிகள் முறியடிக்கப்பட்டனர். [அ-பிரஸ]

3 வருஷந்திற்கு பிரிட்டிஷ் அதிகாரிகளின் சேவைகளை வைத்துக்கொள்ள முடிவு

ராணுவத்தில் மட்டும் ஓரே வருஷம்தான் வைத்துக் கொள்ளப்படுவர்

இந்திய சர்க்கார் அறிக்கை

புதடில்லி, நவ 22

இந்திய ராணுவத்திற்கு 1948 ஜனுவரி 1-ம் தேதி முதல் பிரிட்டிஷ் அதிகாரிகளின் சேவை அவர்கள் என்ன நிபந்தனையின்பேரில் இங்கு வேலைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதுபற்றி இந்திய சர்க்கார் இன்று ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்

1. இந்திய ராணுவத்தில் சேவை செய்ய சில பிரிட்டிஷ் அதிகாரிகளை வேலைக்கு வைத்துக்கொள்ளுவதென்று சர்க்கார் சொல்லுகிறது.

2 பழைய கடற்படை, இந்திய ராணுவம் ஆகியவைகளில் சேவை செய்த ஸ்பெஷலிஸ்ட் அபீஸர்கள், பிரிட்டிஷ் படையிலுள்ள அதிகாரிகள் அதிகாரிகளுக்கு மன்னர் கமிஷன் உண்டு இதர ரேங்க அதிகாரிகளுக்கு பிரிட்டிஷ் படைமொழிகள் என்ன உண்டோ அவை அங்கீகரிக்கப்படும்

ராணுவத்தில் ஓரே வருஷ சேவை

ராணுவத்தில் சேவை செய்ய ஒரு வருஷ காலத்திற்கு மட்டுமே பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு வேலைக்கு வைத்துக்கொள்ளப்படுவர்.

கடற்படையில் 3 வருஷங்களும் விமானப் படையில் இரண்டு வருஷங்களுக்கும் வேலைக்கு வைத்துக்கொள்ளப்படும் ஒரு சேவை காலம் இனனும் ஒரு வருஷத்திற்கு நீடிக்கப்படலாம்.

ஒரு வருஷ சர்வீசுக்குப்பிறகு இதர பிலும் விலகவேண்டுமானால் 3 மாத நோடீஸ கொடுக்கவேண்டும்

பிரிட்டிஷ் சர்க்கார் எல்லா பிரிட்டிஷ் அதிகாரிகளையும் பாஸ பெற விரும்பினால் (அப்படி பாஸ பெறுவதற்கான நிலைமை ஏற்பட்டால) அவர்கள் இந்திய சர்க்காருக்கு தெரிவிப்பார்கள். எவ்வளவு சீக்கிரம் சேவையிலிருந்து அவர்களை அனுப்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அனுப்ப இந்திய சர்க்கார் ஏற்பாடு செய்வர்.

குணம் தவறி நடக்கும் அதிகாரிகள் விஷயத்தில் ஸீனியர் பிரிட்டிஷ் ஆபீஸரைக் கலந்து கொண்டு அவர்களை வேலையிலிருந்து நோட்டீஸின்றி நீக்கி விடுவார்கள். அவர்களுக்கு சம்பளமபோகும்செலவும கொடுக்கப்பட்டுவிடும்

பிரிட்டிஷ் அதிகாரிகள் ஸிவில் நிவாரணத்திற்கு உட்பட்டவர்களே. இந்தியக் கோர்ட்டுகளில் அவர்கள் மீது வழக்கு ஏற்பட்டால் விசாரிக்கவுமபடலாம்.

பிரிட்டிஷ் WOS NCOS ஆகியோர் பிரிட்டிஷ் மலைக்குடிபட்டவர்களாக இருந்தபோதிலும் இந்தியப் படையிலுள்ள ஸீனியர்களின் உத்தரவுக்குட்பட்டு நடப்பர்.

பிரெஞ்சு நிதி நிபுணர் பிரதம மந்திரியானார்

பிரான்ஸின் நெருக்கடியான நிலைமை

பாரிஸ், நவ 22

பிரான்ஸில் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதால் பிரதம மந்திரி ராமடீர் ராஜினாமா செய்தார். திரு. பிளம் மீது நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறாது போகவோ அவர் மந்திரி சபை அமைப்பதைக் கைவிட்டார். பிறகு குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நிதி நிபுணரான திரு. ராபர்ட் ஷூமனை மந்திரி சபை அமைக்குமாறு குடியரசுத் தலைவர் அவரை அழைத்தார் பிரெஞ்சு பாராளுமன்றம் 412 வாக்குகளால் சாதகமாகவும் 184 வாக்குகள் பாதகமாகவும் அளித்து அவர் மீது நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றினர். அவர் இன்றிரவு தனது மந்திரிகளின் பெயர்களடங்கிய ஜாபிதாவை சமர்ப்பிப்பார். (ராய்ட்டர்)

மந்திரி சபை அற்றுநிற்கும் பிரான்ஸ

பிளமுக்குப் போதிய வோட்டுகள் கிடைக்கவில்லை

பாரிஸ, நவ 21

சோஷியலிஸ்டு கட்சிக்குச் சொந்தமாகிய லியோன் பிளம் பிரதமராக வருவதற்கு வேண்டிய பெரும்பான்மை வோட்டுகள் அவருக்கு கிட்டாததால் அவரால் புதிய சர்க்கார் நிறுவ முடியாதபோய் விட்டது. அவருக்கு 500 வோட்டுகள் சாதகமாகவும் எதிராக 277 வோட்டுகளும் கிடைத்தன, பிளம் தமது தோல்வியின் பின்னர் கம்யூனிஸ்டுகளும் டிகால் கட்சியினரும் நாட்டை தவறான வழியிற செலுத்துவதாகக் கூறிக் கண்டித்தார். (ராய்ட்டர்)

கடலில் சமரசப் பேச்சு

இந்தோனேஷியா தகராறு

பட்டேவியா, நவ. 22

இந்தோனேஷியா குடியரசுக்கும் டச்சு சர்க்காருக்குமிடையே அமெரிக்க யுத்தக்கப்பலில் சமரசப் பேச்சு நடைபெறுமென்று ஐக்கிய தேச பாதுகாப்பு சபை நியமித்த மூவர் மத்யஸ்த கமிஷன் அறிவிக்கிறது.

மூவர் கமிஷன் அங்கத்தினரான பெல்ஜிய பிரதிநிதி வான் ஜீலாந்து தனக்குப் பதில் ஒருவரை நியமித்துவிட்டு இன்று விமானத்தில் ஹாலாது மார்க்கமாக பெல்ஜியத்துக்குப் பயணமானார்.

இன்று முதல் டச்சுக்கே எல்.எம். விமான போக்கு வரத்து கம்பெனி ஆஸ்ட்ரேலியாவுக்கும் பட்டேவியாவுக்கும் நடைபெற்றுவரும் விமானபோக்கு வரத்தை அதிகரித்திருக்கிறது, வாரத்திற்கு 7 தடவை போக்கு வரத்து நடக்கும். [ராய்ட்டர்]

விலையாகாத ஜவுளிகளுக்கு கூபபன்கள் எடுபடக்கூடும்

கொழும்பு, நவ 24

ஜவுளி வகைகள் பாடசாலைக் கூபபன்களில் வழங்கப்பட்டு வந்ததினால் அநேகமாக ஜவுளி வாங்குபவர்கள் அதிகக் கஷ்டங்களுக்குள்ளாகி யுள்ளனர் இப்பொழுது பாடசாலைக் கூபன்கள் விநியோகம் நிறுத்தப்பட்டுவிட்டதுடன் மற்றும் சில மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன இதனால் பொதுமக்களுக்கு நன்மையுண்டென்று கூறப்படுகிறது. ஜப்பானிய ஜவுளி வகைகள் கூபபன்கள் இன்றி விற்பனைக்கு விடப்பட்டுள்ளது. இதனால் இப்பொழுது ஜப்பானிய ஜவுளிகள் அதிகம் விற்பனையாகின்றன. கூபனுக்கு வற்கமாட்டாத ஜவுளிகளை கூபபன் முறையிலிருந்து நீக்கிவிட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் டாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி ஈ வரதன் எம்.எஸ. சரோஜினி, எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் நிறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

நாளை ஆரம்பம்!

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடி ஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப்படம் காண்பிக்கப்படும்.

"சுதந்திரன்" ஏஜண்டுகள்

மத்திய மாகாணப் பகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் எங்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டிருப்பவர்களின் விபரம்:--

சோல் ஏஜண்ட்.	K. ரத்தினசிங்கம், நம். 186 அம்பகமுவ ஸ்டிரீட், கம்பளை.
மாத்தளை & உக்குவளை	— K செல்வநாயகம் சிரிகாந்தா ஸ்டோர்ஸ் நம். 131 மாத்தளை.
கண்டி.	— S கிருஷ்ணாவுக்கரசு, நம் 90 கொழும்புவீதி, கண்டி.
ஹட்டன்	— இம்பீரியல் பிரஸ், ஹட்டன்.
நோர்வுட்	— A நவரட்னம் & கம்பெனி நம் 53 மெயின்வீதி, நோர்வுட்.
பொகவந்தலாவ	— VEA இளைபதம்பி, நம். 68 & 83 கொட்டியாகல, பொகவந்தலாவ.
அப்-கொட்	— R நடேசன், அப்கொட்.
நாவலப்பிட்டி	— M O முருகேசுபிள்ளை & சன்ஸ, நம். 4 அம்பகாவவீதி, நாவலப்
கடுகன்னுவ	— S S ராஜரத்னம், [பிட்டி நம் 188 கண்டிரோட், கடுகன்னுவ
பிலிமத்தலாவ	— S K சின்னத்தம்பி, கண்டிரோட், பிலிமத்தலாவ.
மாவனல்ல	— [illegible] புக்டிப்போ, மாவனல்ல
தொளஸ்பாகை	— PR AM துரைசுவாமி & கம்பெனி தொளஸ்பாகை.
உலப்பனை	— பி சின்னண்டி, நம். 275 நாவலப் பிட்டிரோட், உலப்பனை.
கொட்டகல	— N P செல்லத்துரை, கொட்டகல,
தலவாக்கலை	— A S அருணாசலம், பெயிலைடிரீட், தலவாக்கலை.
நுவரேலியா	— சுபரமணியம் ஸ்டோர்ஸ், புகக்கடைஸ்டிரீட், நுவரேலியா.
பேராதெனியா	— V A அப்பாக்துரை, கொழும்பு வீதி, பேராதெனியா.
அல்கரனோயா	— SM RM S செல்லையாபிள்ளை, நம் 47 ராகலபசார், அல்கரனோயா
பூண்டுலோயா	— M S K கருப்பையாபிள்ளை, நம் 12 அப்பர்பசார், பூண்டுலோயா
உப்புராச	— S SP சுப்பையா, நம் 9 உப்புராச பசார், உப்புராச.
கம்பளை	— K S கந்தபிரமணியம்பிள்ளை. நம 2&4 அம்பகமுவ வீதி, கம்பளை
கினிகத்தன	— M [illegible] துரை, கினிகத்தன,
[illegible]சலாவ	— M K T வெங்கடாசலம்பிள்ளை. நம் 109 நுவரேலியா ரோட், புச
[illegible]ரம்பொட	— AS TS சிதம்பரம்பிள்ளை, [லாவ நம் 18 ரம்பொட.
[illegible]ம்புக்கண	— M N கார்த்திகேசு, நம் 52 மெயின்ஸ்டிரீட், ரம்புக்கண
கட்டுகுத்தாலை	— R N முத்துக்கருப்பபிள்ளை, நுவரேலியாரோட், கடுகுத்தாலை

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு உடனே ஏஜண்டுகள் தேவை.

194 A தட்டாரத்தெரு, கொழும்பு. மானேஜர், சுதந்திரன்.

இளைஞன்

புதுமையும் புரட்சியும் கொண்டு இளைஞர் ஆதிக்கம் கருத வெளிவரும் கிழமை இதழ்

24-11-47 இதழ் வெளிவந்துவிட்டது

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு முழுமைக்கும் சப்-ஏஜண்டுகள் தேவை. இதர இடங்களில் ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

இளைஞன் பிரசுராலயம்,
நிர். 2, கிரான்ட்பாஸ் வீதி,
கொழும்பு.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 24-ம் தேதி இந்தப் பத்திரிகை 194ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கூடத்தாரில் அச்சிட்டு, கொழும்பு-மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org